# ஸ்ரீ சிவசுப்ரமணிய நாடார் பொறியியல் கல்லூரி
# சாரல் தமிழ் மன்றம்
# தமிழ்த் திருவிழா கொண்டாட்டம்

நமது கல்லூரியின் சாரல் தமிழ் மன்றம் ஆண்டுதோறும் கொண்டாடும் **"தமிழ்த் திருவிழா"** இந்த ஆண்டு 01.03.2023 புதன் கிழமையன்று நமது கல்லூரியின் பிரதான கேளரங்கத்தில் கொண்டாடப்பட்டது.



தமிழ் திருவிழாவிற்கு சிறப்பு விருந்தினராக பத்திரிக்கையாளர் நக்கீரன் பத்திரிக்கையின் ஆசிரியர் திரு. கோபால் அவர்கள் வருகை தந்தது விழாவிற்கு சிறப்பு சேர்த்தது.

காலை 10:30 மணிக்கு சிறப்பு விருந்தினரைச் சாரலின் பறை இசை முழங்க மன்றத்தின் பொறுப்பாசிரியர் திரு. கு. முருகேசன் அவர்களும் , கல்லூரியின் முதல்வர் திரு. வயி. அண்ணாமலை அவர்களும் வரவேற்றனர். தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய விழாவில் இயந்திரவியல் துறையின் இறுதியாண்டு மாணவர் முகிலன் அனைவரையும் வரவேற்றார்.

வரவேற்புரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் குத்துவிளக்கு ஏற்றி விழாவை இனிதே துவைக்கி வைத்து சாரல் தமிழ் மன்றத்தின் மின்சாரல் -14 என்னும் மின்னணு இதழை சிறப்பு விருந்தினர் வெளியிட கல்லூரியின் முதல்வர் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். மின்சாரல் மாணவர்களுக்கான படைப்பாற்றல் களமாக திகழ்ந்து கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம் போன்ற பல இலக்கியப் பகுதிகள் கொண்ட இலக்கிய சுவைமிக்க தொகுப்பாகும்.

தமிழ்த் திருவிழாவில் தமிழ் மன்றப் பொறுப்பாசிரியர் திரு. கு. முருகேசன் அவர்கள் வாழ்த்துரையும் கல்லூரி முதல்வர் திரு . வயி . அண்ணாமலை அவர்கள் தலைமையுரையும் ஆற்றினார்கள்.



அதனைத்தொடர்ந்து சிறப்பு விருந்தினர் திரு. நக்கீரன் கோபால் அவர்கள் தனது கல்லூரிப்படிப்பை அடுத்து தனது பணி அனுபவத்தையும் அதனைத் தொடர்ந்து எவ்வாறு இதழாசிரியராக மாறினார் என்பதையும் தனது பத்திரிகை பணியில் தான் சந்தித்த சவால்களையும், அனுபவங்களையும் மாணவர்களிடம் பகிர்ந்துகொண்டார். அது மாணவர்களுக்கு ஊக்கம் ஊட்டும் விதமாக அமைந்தது. கல்லூரி முதல்வர் சிறப்பு விருந்தினருக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசினை வழங்கினார்.

தமிழ்த் திருவிழாவில் அடுத்ததாக சாரல் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றன. அரங்கம் அதிரந்த பறை இசையும், மேடைக்கு அணியாக ஒயிலாட்டமும் , கரகாட்டமும் பொய்க்கால் குதிரையும் வீரத்தின் வேறான சிலம்பாட்டமும், மேடையில் அணிவகுத்தன. அரங்கத்தில் இருந்தவர்கள் அனைத்து நிகழ்வுகளையும் கண்டு களித்தனர்.



புத்தக வெளியீடு, மாணவர்களின் பறையாட்டம், பாரத நாட்டியம், கரகாட்டம் மற்றும் ஒயிலாட்டம் என கலை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இந்த திருவிழா கொண்டாட்டத்தில் சுமார் 900 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் பலரும் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர்.











சாரல் தமிழ் மன்றத்தின் மாணவப் பொறுப்பாளர் மின் மற்றும் மின்னணுவியல் துறையின் இறுதியாண்டு மாணவி செல்வி. காவியா அவர்களின் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவடைந்தது. சாரல் மன்றத்தின் தமிழ் திருவிழா கொண்டாட்டத்திற்கு சாரல் தமிழ் மன்றத்தின் மாணவப் பொறுப்பாளர் காவியா அவர்கள் மாணவர்களை ஒருங்கிணைத்து விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார். மாணவர்கள்,ஆசிரியர்கள்,கல்லூரி முதல்வர் மற்றும் கல்லூரி நிர்வாகம் என அனைவரின் ஒத்துழைப்போடும் தமிழ் திருவிழா வெற்றிகரமாக கொண்டாடப்பட்டது. தமிழ்த் விழாவின் வெற்றிக்கு பாடுபட்ட அனைவருக்கும் சாரல் தமிழ் மன்றத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.



அன்புடன், கு. முருகேசன் , சாரல் தமிழ் மன்ற பொறுப்பாசிரியர்